செய்தி வெளியீடு எண்:233/2018 நாள்: 18.04.2018

**வேலூர் மாவட்டத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகள் வணிக ரீதியாக கடத்தல் மற்றும் பாலியல் சுரண்டலிலிருந்து தடுத்தல் மாவட்ட அளவிலான குழந்தைகள் பாதுகாப்பு குழு ஆலோசனை மற்றும் ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது!**

வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் பெண்கள் மற்றும் குழந்தைகள் வணிக ரீதியாக கடத்தல் மற்றும் பாலியல் சுரண்டலிலிருந்து தடுத்தல் மாவட்ட அளவிலான குழந்தைகள் பாதுகாப்பு குழு ஆலோசனை மற்றும் ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டரங்கில் 23.11.2017 அன்று நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்:

வேலூர் மாவட்டத்தல் குழந்தைகளின் பாதுகாப்பு குறித்து அரசு நலத்திட்டங்கள், குழந்தைகள நலன் சார்ந்த சட்டங்கள் பற்றி 30 பள்ளிகளில் விழிப்புணர்வு கூட்டம் நடத்தப்பட்டுள்ளது. குழந்தைகள் நலன் தொடர்புடைய WhatsApp group டிசம்பர் 4 ஆம் தேதி முதல் துவங்கப்பட்டு குழந்தைகள் சார்ந்த பிரச்சனைகள் குறித்து பகிர்ந்து கொள்ளப்பட்டது. வேலூர் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை கட்டுப்பாட்டில் உள்ள (IELC) இந்தியன் இவாஞ்சலின் லூதரன் சர்ச் மனவளர்ச்சி குன்றியோருக்கான இல்லத்தினை பிப்ரவரி மாதம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு இளைஞர் நீதிச் சட்டத்தில் பதிவு செய்ய கருத்துரு சமூகப் பாதுகாப்புத் துறை சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அனைவருக்கும் கல்வி இயக்கம் SSA துறை மூலம் ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்பு திட்ட வழிகாட்டுதலின் படி நிறுவனம் சாரா நிதி ஆதரவு திட்டத்தின் படி நிதி உதவி கோரும் பயனாளிகளை தேர்வு செய்ய SSA துறையின் மூலம் 27 விண்ணப்பங்கள் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வேலூர் மாவட்டத்தில் 1098 சைல்டு லைன் துவக்கப்பட்டது. வேலூர் மாவட்டம் பனப்பாக்கம் அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியின் முன்பு உள்ள சாலையில் வேகத்தடை அமைத்தல். வளரிளம் பருவத்தினரிடையே ஏற்படும் தற்கொலை எண்ணத்தினை தடுத்தல் குறித்த பயிற்சியின் பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுதல். Women and Hostel Regulation Act 2014 சட்டத்தின் கீழ் உள்ள பெண்கள் மற்றும் குழந்தைகள் இல்லங்களை பதிவு செய்ய வழங்கப்பட்டுள்ள விண்ணப்பத்தின் மேல் நடவடிக்கையாக இல்ல ஆய்வு மேற்கொள்ளுதல். வேலூர் மாவட்டத்தில் உள்ள குழந்தைகள் இல்லங்களை மாவட்ட அளவிலான குழு உறுப்பினர்களால் ஆய்வு மேற்கொள்ளுதல். வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து காவல் நிலையம் மற்றும் பொது இடங்களில் குழந்தைகள் நலன் தொடர்புடைய அலுவலர்களின் தொலைபேசி எண் குறித்த விழிப்புணர்வு பலகை வைத்தல் ஆகியவை தொடர்பாக இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது:-

பள்ளிக் கல்வித் துறையின் மூலம் பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் பயிற்சி அவர்களின் தேவைக்கு ஏற்றவாறு வழங்கிடவும், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அந்தந்த வட்டாரத்திற்குட்பட்ட பள்ளிகளை மாதத்திற்கு ஒரு முறை ஆய்வு மேற்கொண்டு குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்தல், அனைத்து பள்ளிகளிலும் பெற்றோர் ஆசிரியர் கழக கூட்டம் நடத்தப்பட்டு குழந்தைகளின் நலன் சார்ந்த தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு மாநில குழந்தைகள் உரிமை பாதுகாப்பு ஆணைய உறுப்பினர் திரு.ராமலிங்கம் பேசியதாவது:-

வேலூர் மாவட்டத்தில் நர்சரி பள்ளி, மெட்ரிக் பள்ளி, சி.பி.எஸ்.சி. பள்ளி, கேந்திய வித்யாலயா, ICSE ஆகிய பள்ளிகளில் இலவச கல்வித் திட்டத்தில் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை கல்வி பயில விரும்பும் குழந்தைகள் ஆன்லைன் மூலம் 20.04.2018 முதல் 18.05.2018 வரை விண்ணப்பித்துக் கொள்ளலாம். 25 சதவிகதம் இட ஒதுக்கீடு அளிக்கப்படும். இக்கல்வி திட்டத்தில் விண்ணப்பிக்கும் மாணவர்களின் பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ.2 இலட்சத்திற்குள் இருக்க வேண்டும். குழந்தைகளுக்கு எதிராக நடக்கும் வன்முறைகள் குறித்த புகார்களை தலைவர் தமிழ்நாடு மாநில குழந்தைகள் உரிமை பாதுகாப்பு ஆணையம், சென்னை அவர்களின் தொலைபேசி எண்:044-26421359, scpcrtn@gmail.cpm அல்லது scpcr.tn.gov.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு தெரிவிக்கலம். மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் முதன்மை கல்வி அலுவலருடன் இணைந்து வேலூர் மாவட்டம், அரக்கோணம், காந்தி நகர் நகராட்சி நடுநிலைப் பள்ளியை தேர்வு செய்து சிறப்பு கல்வி முறை பயன்படுத்தி மாணவ மாணவிகளின் கல்வி வளர்ச்சி திறனை ஒரு வருடத்திற்குள் உயர்த்திட நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். குழந்தைகளின் நலன் மற்றும் பாதுகாப்பு குறித்தும் உளவியல் பிரச்சனைகளை களைய மாவட்ட கல்வித் துறையுடன் சமூகப் பாதுகாப்புத் துறையும் ஒருங்கிணைந்து செயல்படுதல் வேண்டுமென்று தமிழ்நாடு மாநில குழந்தைகள் உரிமை பாதுகாப்பு ஆணைய உறுப்பினர் திரு.ராமலிங்கம் அவர்கள் பேசினார்கள்.

இக்கூட்டத்தில் திட்ட இயக்குநர்கள் (ஊரக வளர்ச்சி முகமை) திரு.பெரியசாமி, (மகளிர் திட்டம்) திரு.சிவராமன், மாவட்ட குழந்தைகள் நல அலுவலர் திரு.நிஷாந்தினி மற்றும் அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.

வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
வேலூர்.